# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண்.32/2024

**வா.சா.2** - நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 26-03-2026

பெயர் = இராஜம்மாள் **வா.சா.2**

**வா.சா.2** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை எதுவும் சார்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னை தாவா வழக்கில் சாட்சியமளிப்பதற்கு யார் அழைத்து வந்தார் என்றால் அழகுத்தாய். இன்று அழகுத்தாய் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார் என்றால் சரிதான். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் 1ம் வாதி சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் இருவரும் எந்த சொத்து சம்மந்தமாக என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்தின் விஸ்தீரணம் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான்.

(2) தாவா சொத்து குன்னம்மாளுக்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கிரைய பாத்தியப்பட்ட சொத்து. எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியும், 2/99 பி. எனது வீட்டின் கதவு எண் என்ன என்றால் 2/48 எ. இந்த வழக்கின் பிரதிவாதி யார் என்றால் இராமசாமி. இராமசாமிக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் இராமசாமி மற்றும் அழகுத்தாய் இருவருக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது. நான் இராமசாமிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்று

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.03.26 19:27:50 +0530

சாட்சியமளித்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.26 19:27:55 +0530